வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | இந்துசமயம்- I | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவு செய்க.

01. 1) கோலாட்டம்  2) வசந்தன் கூத்து  3) பரதநாட்டியம்
4) கரகாட்டம்  5) காவடி  (   )

02. 1) இருத்தல்  2) விடுதல்  3) இயற்றல்
4) பலம்  5) மேவல்  (   )

03. 1) பெரியானைக்குட்டிச் சித்தர்  2) நவநாதச் சித்தர்
3) கடையிற் சுவாமிகள்  4) சித்தானைக் குட்டிச் சித்தர்
5) சிவவாக்கியர்  (   )

04. 1) அஜந்தா  2) வாதாபி  3) எல்லோரா
4) தஞ்சாவூர்  5) ராஜபுத்திரா  (   )

05. 1) பானைவயிறு  2) அபயகரம்  3) உடுக்கை ஏந்தியது
4) தீ ஏந்தியகை  5) தூக்கியதிருவடி  (   )

❖ 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச்சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லைத் தெரிவு செய்க.

06. 1) பிரம சூத்திரம் - பாதராயனர்
2) சாங்கியம் - கபிலர்
3) யோகம் - பதஞ்சலி
4) யாழ்நூல் - விபுலானந்தர்
5) துவைதம் - சங்கரர்

07. 1) திருவிளையாடற் புராணம் - கடவுள் மா முனிவர்
2) குமரகுருபரர் - சிதம்பர மும்மணிக் கோவை
3) காளிதாசர் - சாகுந்தலம்
4) சிவானந்த நடனம் - ஆனந்த குமாரசுவாமி
5) உமாபதி சிவாச்சாரியார் - திருவருட்பயன்

agaram.lk

08. 1) கச்சியப்ப முனிவர் - தணிகைப் புராணம்
2) அருணந்தி சிவாச்சாரியார் - உண்மை விளக்கம்
3) சிருங்கேரி மடம் - ஆதி சங்கரர்
4) சிவஞான முனிவர் - சிவஞான பாடியம்
5) தருமபுர ஆதீனம் - ஞான சம்பந்தர் மாத இதழ்

09. 1) இமயம் - தீய செயல்களை தவிர்த்தல்
2) தாரணை - மன அடக்கம்
3) ஆசனம் - உடலை தியானத்திற்கு வழிப்படுத்தல்.
4) நியமம் - ஒழுக்க விதிகளை கடைப்பிடிக்காமை.
5) சமாதி - தியானத்தில் நிலை பெற்றிருத்தல்

10. 1) நனவு நிலை - சாத்திரம்
2) கனவு நிலை - சொப்பனம்
3) உயிர்ப்பு நிலை - சுழுத்தி
4) பேருறக்க நிலை - துரியம்
5) உயிர்ப்பு அடக்கிய நிலை - துரியாதீதம்

❖ **11 முதல் 15 வரையுள்ளவினாக்கள்ஒவ்வொன்றிலும் "அ""ஆ"என்னும் நிரல்களின் கீழ் சில விடையங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு ஏற்ற விதத்தில் "ஆ" நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

11.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1) படைத்தல் | A) திதி |
| 2) காத்தல் | B) சிருஷ்டி |
| 3) அழித்தல் | C) சங்காரம் |
| 4) மறைத்தல் | D) அனுக்கிரகம் |
| 5) அருளல் | E) திரோபவம் |

1) BACED 2) DEABC 3) BCADE 4) CBEAD 5) EBACD

12.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1) கற்பம் | A) ஒன்றிற்கு ஆசைப்படல் |
| 2) குரோதம் | B) கோபம் |
| 3) மோகம் | C) எப்போதும் துக்கப்படல். |
| 4) அஞர் | D) பிடித்ததை பிடித்தல். |
| 5) நகை | E) சிரித்தல். |

1) DBACE 2) DBCEA 3) ABCDE 4) ECBDA 5) BCAED

13.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1) குரு | A) நமசிவாய |
| 2) இலிங்கம் | B) குறி (தோற்றம் - ஒடுக்கம்) |
| 3) சங்கமம் | C) சிவனடியார் கூட்டம் |
| 4) தீட்சை | D) குற்றம் நீக்குபவர். |
| 5) தூய பஞ்சாட்சர மந்திரம் | E) பாசத்தை கெடுத்து ஞானத்தை கொடுப்பது |

1) ABCDE 2) DBCAE 3) CAEBD 4) DBCEA 5) BCADE

agaram.lk

14. "அ" "ஆ"

| "அ" | "ஆ" |
|---|---|
| 1) சிவஞான சித்தியார் | A) திருக்கடவூர் உய்யவந்த தேவர் |
| 2) சிவப்பிரகாசம் | B) உமாபதி சிவாச்சாரியார் |
| 3) திருவுந்தியார் | C) மனவாசங் கடந்த தேவனார். |
| 4) திருக்களிற்றுப்படியார் | D) திருவியலூர் உய்யவந்த தேவர். |
| 5) உண்மை விளக்கம் | E) அருணந்தி சிவாச்சாரியார் |

1) ABCDE 2) EBDAC 3) EBACD 4) CADBE 5) EBDCE

15.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1) கந்தபுராணம் | A) நக்கீரர் |
| 2) குமார சம்பவம் | B) காளிதாசர் |
| 3) திருமுருகாற்றுப்படை | C) கச்சியப்ப சிவாச்சாரியார் |
| 4) கந்தர்கலி வெண்பா | D) குமார குருபரர் |
| 5) வேல் விருத்தம் | E) அருணகிரிநாதர் |

1) CBAED 2) ABEDC 3) CBADE 4) BCADE 5) DEABC

❖ **16 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழ் தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. வைணவத்தில் "வேதம் தமிழ் செய்த மெய்யன்" எனப் போற்றப்படுபவர்?
1) பூதத்தாழ்வார் 2) தொண்டரடிப் பொடியாழ்வார் 3) நம்மாழ்வார்
4) பெரியாழ்வார் 5) மதுரகவியாழ்வார்

17. மெய்கண்ட தேவர் முத்தி பெற்ற தினம் யாது?
1) ஐப்பசிச் சுவாதி 2) புரட்டாதிப் பூரம் 3) ஆவணி உத்தரம்
4) சித்திரை அத்தம் 5) சித்திரைச் சதயம்

18. நிலையாக ஓர் இடத்தில் நிறுவப்படும் விக்கிரகம் எவ்வாறு அழைப்படும்?
1) சலவிக்கிரகம் 2) அசல விக்கிரகம் 3) சலாசல விக்கிரகம்
4) கல்விக்கிரகம் 5) செப்பு விக்கிரகம்

19. சிவாலயத்தில் விமான கோஷடங்களில் இடம்பெறும் தெய்வங்களின் பெயர் அடக்கிய தொகுதி?
1) தட்சணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மன், காமாந்தன்.
2) இலிங்கேற்பவர், தட்சணாமூர்த்தி, பிரம்மன், துர்க்கா
3) தட்சணாமூர்த்தி, இலிங்கேற்பவர், விநாயகர், காலாரி மூர்த்தி.
4) திரிபுராந்தகர், இலிங்கோற்பவர், காமாந்தகர், உமாமகேஸ்வரர்.
5) தட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர், விஸ்ணு, பிரம்மன்

20. மத்துவர் விளக்கவுரை எழுதிய நூல்களை மாத்திரம் கொண்ட தொகுதி?
1) வேதாந்த சூத்திரம், தசோபநிடதங்கள், பகவத்கீதை.
2) பகவத்கீதை, பிரம்ம புராணம், கடோபநிடதம்.
3) வேதாந்த சூத்திரம், ஸ்ரீபாஷ்யம, பகவத்கீதை.
4) பிரம்ம சூத்திரம், கல்பசூத்திரம், பிரம்ம புராணம்
5) பகவத் புராணம், ஸ்ரீபாஷ்யம், பாகவதபுராணம்

21. உபநிடதங்களை தொகுத்து பிரம்ம சூத்திரம் என்ற பெயரினை ஆக்கியவர்?
1) வேதவியாசர் 2) யாக்ஞவல்கியர் 3) நிம்பாக்கர்
4) பாதராயணர் 5) நாரதர்

22. இராம கிருஷ்ண மிஷனை நிறுவியவர்?
1) ஸ்ரீ அரவிந்தர் 2) சுவாமி விபுலானந்தர் 3) சுவாமி விவேகானந்தர்
4) தயானந்த சரஸ்வதி 5) இந்து போட் இராசரத்தினம்.

23. சைவ சித்தாந்த மரபில் ஆன்மா பக்குவப்படுவதற்கான மூன்று படிநிலைகளை அடக்கும் தொகுதி?
1) சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்.
2) இருவினை பெயர்ப்பு, மலபரிபாகம், சத்தினி பாதம்.
3) பக்தி, சஞ்சிதம், பிராரத்துவம்.
4) கர்மம், பக்தி, மலபரிபாகம்
5) சஞ்சிதம், பக்தி, பிராரத்துவம்

24. கரகம் என்பதற்கு வழங்கப்படும் மற்றொரு பெயர் யாது?
1) அடுக்கு 2) காவடி 3) கொம்புமுறி
4) கும்மி 5) பூம்பந்தல்

25. 19ம் நூற்றாண்டில் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு வெளிவந்த முதல் பத்திரிகை?
1) சைவ உதயபானு 2) இலங்கை நேசன் 3) இந்து சாதனம்
4) விஞ்ஞான வர்த்தினி 5) சைவபேதம்

26. மீளா நகரம் பற்றிய கருத்தை முன்வைத்த வேதாந்தி.
1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர்
4) கௌடபாதர் 5) பாதராயனர்

27. "இருளில் இருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக" எனக் கூறும் உபநிடதம்?
1) ஐதரேய உபநிடதம் 2) சாந்தோக்கிய உபநிடதம் 3) முண்டக உபநிடதம்
4) கேன உபநிடதம் 5) மிருக தாரணிய உபநிடதம்

28. சித்தாந்த சாஸ்திரயங்களில் மிகக் குறைந்த வெண்பாக்களால் அமைந்த நூல்?
1) உண்மை விளக்கம் 2) சிவஞான சித்தியார் 3) சிவஞான போதம்
4) கொடிக்கவி 5) சிவப்பிரகாசம்

agaram.lk

29. அட்டாங்க யோகங்கள் மூன்று அடங்கும் தொகுதி?
1) இயமம், நியமம், ஆசனம் 2) அணிமா, லகிமா, மூலதாரம்
3) தியானம், யோகம், கரணம் 4) நிட்டை, மணிப்பூராடகம், யோகம்
5) ஆசனம், மூலாதாரம், சுவாதிஸ்டானம்

30. "இராஜசிம்ம பல்லவேஸ்வரம்" என அழைக்கப்படும் கோயில்?
1) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் 2) திருச்சி குடைவரைக் கோயில்
3) காஞ்சிக் கைலாசநாதர் கோயில் 4) பனைமலைக் கோயில்
5) தர்மராஜரதக் கோயில்

❖ **31 – 35 வரையான வினாக்கள் ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் உள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க?**

31. சக்தி வழிபாட்டின் தொன்மை?
1) சிந்துவெளி நாகரிகத்தில் சாந்தமுகம் கோரமுகம் எனப்பல பெண் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன.
2) வேதங்களில் விடியற்கால தெய்வமாக சரஸ்வதி தேவி வழிப்பட்டாள் எனக் கூறுகிறது.
3) இதிகாசங்களில் இராமபிரான் துர்கா பூசை செய்ததாகவும், கண்ணன் கார்த்திகாயினி வழிபாடு செய்ததாகவும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.
4) மார்க்கண்டேய புராணத்தில் சக்தியின் பெருமை பற்றி கூறுகின்றது.
5) சங்க காலத்தில் சக்தி வழிபாடானது போர்த்தெய்வ வழிபாடாக காணப்பட்டது.

32. சேர்.பொன் இராமநாதனின் சமயப்பணி
   1) மேற்குல நாடுகளில் சைவம், சித்தாந்தம் போன்ற விடயங்கள் பற்றி ஆங்கிலத்தில் சொற்பொழிவு செய்து சமய உண்மையை உலகறியச் செய்தவர்.
   2) யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவியவர்.
   3) சைவ ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான பரமேஸ்வரா தமிழ் பண்டிதர் ஆசிரிய கலாசாலையை நிறுவினார்.
   4) கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயம் திருநெல்வேலி பரமேஸ்வரன் ஆலயம் என்பவற்றை அமைத்தார்.
   5) சைவ வித்தியா விருத்திச் சங்க அங்கத்தவராக இருந்து சைவ சமயம் வளரப் பணியாற்றி 1948ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

33. இந்து சமயத்தின் தனித்துவமும் சிறப்பம்சமும்.
   1) பரந்த நோக்குடையது.
   2) சனாதன தர்மம் என அழைக்கப்படுகின்றது.
   3) மனித நேயப்பண்பு நிறைந்தது.
   4) உலகத்தையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பெயரைக் கொண்டது.
   5) வேற்றுமையில் ஒற்றுமை காணாதது.

34. பொலனறுவைக்கால ஆலயங்கள்
   1) பண்டித சோழேஸ்வரம் பற்றிய குறிப்புக்கள் குருநாகல் கல்வெட்டில் காணப்படுகிறது.
   2) சிவன் கோயில்களுள் வானவன் மாதேவி ஈஸ்வரம் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது.
   3) பொலனறுவைக் காலத்தில் 10 சிவன் கோயில்களும் 5 விஸ்ணு கோயில்களும் 2 காளி கோயில்களும் கண்டு பிடிக்கப்பட்டது.
   4) திருக்கேதீஸ்வரத்தில் புதிய கோயில்கள் அமைத்து இராஜ இராஜேஸ்வரம் என பெயரிடப்பட்டது.
   5) பொலனறுவைக் கால புதிய கோயில் கல்லினாலும் உலோகத்தாலும் ஆன விக்கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

35. தீட்சை
   1) சமய தீட்சை என்பது பிரவேச தீட்சை என அழைக்கப்படும்.
   2) நிர்வாண தீட்சையை விடவும் விசேட தீட்சை மகத்தானது.
   3) தீட்சை வழங்கும் தகுதி ஆசாரிய அபிடேகம் பெற்ற குருவுக்குரியது.
   4) சமய தீட்சை பெற்றவரே உருத்திராக்கம் அணியும் அறுகதை உடையவர்.
   5) ஞானத்தைக் கொடுப்பது தீட்சை ஆகும்.

❖ **மேல்வரும் பகுதியில் முதல் A – O வரை தரப்பட்டுள்ள மூன்று சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடையத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 – 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>ஐப்பசிச்சதய நட்சத்திரம் | B<br>காலடி | C<br>இயற்கை தெய்வம் | D<br>மயமதம் | E<br>மரபுவழி சாதனம் |
| F<br>காசியம் ஆயம் | G<br>மாபாஷ்யம் | H<br>சிவபாத சேகரன் | I<br>ஏகம்ஸத் | J<br>சிலாபரீஷணம் |
| K<br>தகவல் தொழில்நுட்பம் | L<br>கௌடபாதர் | M<br>புருஷ சூக்தம் | N<br>சொல்வழித் தொடர்பு | O<br>நடராஜர் சின்னம் |

agaram.lk

36. சோழர் கால மன்னனுடன் தொடர்புடைய தொகுதி?
1) AHO 2) AHI 3) ACD 4) BEJ 5) MLK

37. இருக்கு வேதத்துடன் தொடர்புடைய தொகுதி?
1) CIJ 2) EJO 3) BGL 4) ABD 5) CIM

38. விக்கிரக கலையுடன் தொடர்புடைய தொகுதி?
1) ACE 2) AHO 3) DFJ 4) EKB 5) BGO

39. சங்கரருடன் தொடர்புடைய தொகுதி?
1) BGA 2) AFH 3) DLA 4) BGL 5) LCE

40. சைவசமய ஊடக வகைகளுடன் தொடர்புடைய தொகுதி?
1) EKD 2) EKN 3) HMN 4) BDO 5) FJO

❖ **கணபதி வழிபாடும் தத்துவமும், மற்றும் திருஞான சம்பந்தரின் சாதனைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 41 தொடக்கம் 44 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. கணபதி வழிபாடும் தத்துவமும்

A. வேதகாலத்தில் கணபதி வழிபாட்டிற்கு "கானானம் நவாம் கணபதி" என்ற குறிப்பு சான்றாகும்.
B. கணபதியின் உடலில் விஸ்ணு, சிவபெருமான், சூரியன், சக்தி, பிரம்ம ரூபங்கள் காணப்படுகின்றன.
C. ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியாக கணேச மகாத்மியும் காணப்படுகின்றது.
D. கணபதியின் ஒற்றைக் கொம்பு தியானத்தை குறித்து நிற்கின்றது.
E. பல்லவர் காலத்தில் கணபதீச்சரத்தில் கணபதி வழிபாடும் இருந்ததை திருஞ்ஞான சம்பந்தர் "ஏந்தியாடும் கணபதீச்சரம்" என பாடியுள்ளார்.
F. கணபதியின் திருவுருவம் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

41. கணபதி வழிபாட்டின் தொன்மையை எடுத்துக் கூறும் சேர்மானம்.
1) ACE 2) ABE 3) BEC 4) ADE 5) BER

42. கணபதியின் திருவுருடத்துடன் தொடர்புடைய சேர்மானம்?
1) BDE 2) BCE 3) AED 4) ABC 5) BDF

2. திருஞான சம்பந்த சுவாமிகளின் சிறந்த பக்தியியலாளர், சாதனையாளர் அவரது சாதனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. கடவுளின் உண்மைத் தன்மையினை நிறுவியமை.
B. பல்லவர் காலத்தில் வாதங்கள் புரிந்து சைவசமய உண்மையை நிலை நாட்டியமை.
C. இறைவனின் திருவருளினால் முத்துக்குடை, முத்துச்சிவிகை, முத்துப்பல்லக்கு என்பவற்றை பெற்ற சிறப்புக்குரியவர் ஆவார்.
D. திருநீறு, பஞ்சாச்சர மந்திரம் போன்ற சிவசின்னங்களின் பெருமையை உலகறியச் செய்தவர்.
E. சிறுவயதில் ஞானப்பால் அருந்தி சிவஞானம் பெற்று இறையருளுடன் பல அற்புதங்களை நிகழ்த்தியவர்.
F. சமய நோக்கு, சமூக நோக்குடன் இறை வழிபாட்டில் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்." என வாழ் வழிகாட்டியவர்.

43. இறைவனின் திருவருளுக்கு பொருத்தமான சேர்மானம்.
1) EDC 2) ADE 3) BEF 4) BCE 5) FCA

agaram.lk

44. சம்பந்த சுவாமியின் சாதனைகளை குறிக்கும் பொருத்தமான சோடி.

1) BDE 2) BDE 3) ADE 4) BEF 5) ADE

❖ **45 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளது. அவற்றுள் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

45. பிரமசூத்திரம்
1) உபநிடதங்களில் காணப்படும் முரண்பாடுகளை நீக்கி பொருள் தெளிவை வெளிப்படுத்துகின்ற நோக்கமற்றது.
2) வேதாந்த சாஸ்திரிகம், வேதாந்த சூத்திரம் என்ற பெயர் வளங்கப்படுகின்றது.
3) 4 அத்தியாயங்களையும் 449 சூத்திரங்களையும் கொண்டது.
4) இந்திய தத்துவ சிந்தனைகளின் ஊற்றாக விளங்குகின்றது.
5) அவிரோதம் என்ற அத்தியாயம் 148 சூத்திரங்களை கொண்டது.

46. திருமூலரும் திருமந்திரமும்.
1) திருமூலர் தர்மபுர ஆதீனத்தை தோற்றுவித்தார்.
2) 300 பாடல்களை கொண்ட சைவத் திருநூல் ஆகும்.
3) சமய தத்துவம் அறிவியல் ஆகியவற்றை ஒருங்கே தரும் கதைக் களஞ்சியம்.
4) கி.பி 4ம் நூற்றாண்டுக்கும் 6ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்.
5) ஐந்தாம் தந்திரத்தில் - மகுடாகமத்தின் சாரம் கூறப்படுகின்றது.

47. சிகரக் கோயில்களில் தியோகக் கோயில்.
1) கி.பி 5ம் நூற்றாண்டில் சிகரங்களுடன் கூடிய ஆலயம் அமைக்கப்பட்டது.
2) குப்தர் கால சிகரக்கோயில்களில் தியோகாக் தசாவதார கோயில் சிறப்புடையதாகும்.
3) கருவறையின் மேல் 30 உயரமுடைய சிகரம் கொண்டது.
4) ஆலயவாயிலில் இருபுறமும் சிற்ப வேலைப்பாடுகள் அற்று காணப்படுகிறது.
5) பௌத்த தூபியை முன்மாதிரியாக கொண்டு அமைக்கப்படவில்லை.

48. பகவத் கீதை
1) தாஸ்யம் முதல் 5பாவங்கள் கூறப்படுகின்றது.
2) 13 – 18 அத்தியாயம் வரை காணப்படுகின்றது.
3) ஆசாரிய பக்தி – பிரபக்தி என இருநிலைகள் கொண்டது.
4) ஸ்ரீ கிருஸ்ண பகவானால் அருளப்பட்ட சிறப்புக்குரிய அறநூல்.
5) பரவித்தை அபரவித்தை பற்றி சிறப்பாக கூறப்படவில்லை.

49. புராணம் ஒரு கலைக்களஞ்சியம்.
1) புராணம் என்பது பழமை.
2) புராணம் பஞ்ச இலக்கணத்தை கொண்டது.
3) புராணங்கள் வழிபாட்டு முறை இலக்கியமரபு, கலைமரபு, கட்டடக்கலைமரபு, அரசியல் மரபு என்பவற்றைக் கொண்டுள்ளது.
4) புராணம் இந்து தத்துவங்களை முன்னோடியாகக் காணப்படுகின்றது.
5) மகாபுராணம் 10 வகைப்படும்.

50. ஆகமமும் அதன் நாற்பாதமும்
1) ஆகமங்கள் இறைவனினால் தோற்றுவிக்கப்பட்டவை.
2) ஆகமங்கள் கோவிற் கட்டடக்கலையையும் கிரியைகளையும் விபரித்துக் கூறுவன.
3) ஆலய கற்பகிரகம், கருங்கல்லாலும், மூலமூர்த்தியாகவும் அமைத்தல் வேண்டுமெனச் சிறப்பித்து கூறவில்லை.
4) ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உலகியல் ஆன்மீக ஞானம் என்னும் துறைகளை விளக்கி நிற்கின்றன.
5) ஆகமங்கள் என்பதற்குத் தொன்று தொட்டு வரும் அறிவு எனவும் பொருள் கொள்ளலாம்.

(50 x 2 = 100 புள்ளிகள்)

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

# Term Examination, March - 2019

| தரம் :- 13(2019) | இந்து சமயம் - II | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி II

❖ பகுதி "அ" இல் இருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் "ஆ"பகுதியில் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### "அ" பகுதி

01. "இந்து சமய இலக்கியங்களில் வேதங்கள் மிகவும் தொன்மையானது"
   1) வேதம் என்ற சொல்லின் பொருள்.
   2) வேதங்களின் முக்கியத்துவம்
   3) வேதகால சமயநிலை
   4) வேதங்களின் தத்துவம்.

(2+6+6+6 = 20 புள்ளிகள்)

02. "இந்துசமய நெறிகளும் சாக்தம் தனித்துவமானது" அதன் அடிப்படையில் மேல்வருவனவற்றை விளக்குக?
   1) தோற்றமும் வளர்ச்சியும்.
   2) சக்தி விரதங்கள்.
   3) தத்துவ நோக்கு.

agaram.lk

(8+4+8 = 20 புள்ளிகள்)

03. "இந்து சமய தத்துவ சிந்தனைக்கு உபநிடதங்கள் மூல ஊற்றுக்களாகும்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலனை செய்க.
   1) உபநிடதம் என்ற சொல்லின் பொருள்.
   2) முக்கிய உபநிடதங்கள் 10 இன் பெயர்களை தருக.
   3) உபநிடதங்களில் பிரம்மம்.
   4) உபநிடதங்களில் பிரபஞ்சம்

(2+6+6+6 = 20 புள்ளிகள்)

### "ஆ" பகுதி

04. "வேதாந்த தத்துவ வளர்ச்சியில் விசிட்டாத்துவம் தனித்துவம் மிக்கது" இக்கூற்றினை ஆராய்ந்து மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
   1) விசிட்டாத்துவம் என்ற சொல்லின் பொருள்.
   2) விசிட்டாத்துவ கோட்பாட்டின் சிறப்பம்சம்.
   3) சங்கரர் கோட்பாடுகள் விசிட்டாத்துவ கோட்பாட்டுடன் வேறுபடும் விதம்.
   4) ஆன்மீக நெறிகளை வெளிப்படுத்தும் வகை.

(2+6+6+6 = 20 புள்ளிகள்)

05. ஈழநாட்டில் சைவசமய வளர்ச்சியில் சைவபரிபாலன சபை ஆற்றிய தொண்டினை மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

06. “வைசித்தாந்த உருவாக்கத்தில் மெய்க்கண்ட தேவரின் பங்களிப்பு உள்ளது.”

1) காலமும் சூழ்நிலையும்.
2) வாழ்க்கை வரலாறு
3) சைவசித்தாந்த உருவாக்கத்தில் பங்களிப்பு.

(4+8+8 = 20 புள்ளிகள்)

07. முக்திக்குரிய சாதனங்களில் சைவ நாற்பாதம் பெறும் முக்கியத்தை சுருக்கமாக விளக்குக.

(20 புள்ளிகள்)

08. சிற்ப சாஸ்திர நெறி சாராத வழிபாட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு பெரிய தம்பிரான் வழிபாட்டு முறையை சுருக்கமாக தருக?

(20 புள்ளிகள்)

agaram.lk